**வெலிகம நகர சபை**

**மாத்தறை மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 11 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிகம நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 26,200 இற்கான நூலகப் புத்தகங்களின் பெறுமதி நூலகப் புத்தகக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் அதனை சரி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகக் கணக்கு ரூபா 52,400 தொகை வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 500,000 இனை பதிவழிப்பதற்காக கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக மூலதன ஈடுபடுத்தலுக்காக வருமானத்தின் பங்களிப்பு கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

(இ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலை ஒன்றின் கடன்கொடுத்தோர் ஏற்பாடு பதிவழிக்கப்பட்டதை சரிசெய்வதற்காக கடன்கொடுத்தோர் கணக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக ரூபா 30,715 இற்கான கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட்டு மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான களஞ்சிய கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஏற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 285,861 இற்கான தொகை ஒன்று இருப்புக் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபையின் சிறப்புக் கடைக் கட்டிடத் தொகுதி நிர்மாணித்தல் கட்டம் 1 இற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 3,924,380 தொகையொன்று முற்பணம் ஒன்றாக செலுத்தியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,990,630 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மிகையாக கணக்கீடு செய்திருந்த தொகை ரூபா 66,250 ஆகும்.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வாடி வீட்டு வாடகை ரூபா 93,437 தொகையினை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 507,600 பெறுமதியான நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவல்லை.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பிரதான பேரேட்டின் பிரகாரம் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 3,270,890 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அத் தொகை வருமானக் கடன்பட்டோர்கள் என கணக்கீடு செய்யப்படாமல் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 ஊழியர்களிடம் சம்பளமற்ற விடுமுறை என அறவிடப்பட வேண்டிய ரூபா 275,022 தொகை கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(ஒ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 783,767 தொகை பெறுமதியான வீதி விளக்கு இருப்பில் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வாண்டின் போது மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து 10 நடமாடும் சிறு கடைகள் நன்கொடையாக கிடைத்திருந்ததுடன் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த WP RW 8998 கொண்ட ரூபா 345,000 தொகை பெறுமதியான டெய்லரின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

(அ) 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,742,906 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மற்றும் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,452,631 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 9,290,275 ஆகும்.

(ஆ) 14 வருமான விடயங்கள் தொடர்பாக வருமானப் பேரேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 2,043,945 தொகை எனினும் தொகுதி கூட்டல் பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 2,753,653 ஆக காணப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 709,708 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,922,637 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 120,298,990 ஆகும்.

(இ) தீர்க்கப்படாத கடன் மீதிகள்

-----------------------------------------------

(i) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,637,021 தொகை பெறுமதியான 11 கணக்குகள் 2015 ஏப்ரல் 23 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான பொது வழங்கள் கடன்கொடுத்தோர் மீதியில் முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,282,767 இற்கான களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய வருமானக் கடன்பட்டோர் மீதியில் காணப்பட்டு வரும் கூட்டுத்தொகை ரூபா 4,737,378 இற்கான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

ரூபா 55,624,678 தொகை பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வுகள், ரூபா 16,547,842 பெறுமதியான பொறுப்புக்கள் தொடர்பாக காலப்பகுப்பாய்வுகளும் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 2,728,198 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 319,552 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 8,300 | 8,818 | 5,136 |
| வாடகை | 13,235 | 9,644 | 7,372 |
| அனுமதிபத்திரக் கட்டணம் | 1,005 | 1,560 | 336 |
| ஏனைய வருமானங்கள் | 178,982 | 168,917 | 55,624 |

2.2.2 வீத வரி

--------------

முன்னைய ஆண்டிற்கான நிலுவைத் தொகை ரூபா 5,103,124 தொகையாக காணப்பட்டதுடன் 2014 ஆண்டிற்கான நிலுவைத் தொகை அறவீடுகள் ரூபா 1,865,227 தொகை ஆகும். இதன் பிரகாரம் நிலுவை வீத வரி அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 27 உம் 2014 ஆண்டிற்கான பில்போடப்பட்டுள்ள தொகை ரூபா 5,926,865 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் பெறுவனவுகள் ரூபா 3,393,455 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 57 ஆகும்.

நிலுவை வீத வரியை அறவீடு செய்வதற்காக 2013 ஆண்டின் போது 1552 தடை கட்டளைகளும், 2014 ஆண்டின் போது 1208 உம், தயாரிக்கப்பட்டிருந்த போதும் அக் கட்டளைகள் தலைவரினால் கையொப்பமிட்டிருக்கவில்லை. அத்துடன் ஆதனங்களை தடைசெய்யும் அலுவலர்களுக்கு எழுத்தாணைகள் ஒப்படைத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆதனங்கள் ஏதேனும் தடைசெய்தலும் நடைபெற்றிருக்கவில்லை.

2.2.3 வாடகை

-------------

மீளாய்வாண்டிற்கான வாடகை பில்போடப்பட்டவைகளின் பெறுமதி ரூபா 2,950,386 ஆக காணப்பட்டதுடன் பெறுவனவு ரூபா 2,271,105 ஆக காணப்பட்டமையால் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 76 ஆகும். 2014 ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் நிலுவைத் தொகை ரூபா 2,334,619 இனை மீளாய்வாண்டின் போது பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 582,236 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 3,270,890 |

- நகர சபை (திருத்திய) கட்டளை சட்டத்தின் பிரிவுகள் 3(2) மற்றும் 17(11) பிரகாரம் கொழும்பு பதிவாளரினால் 2008 ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான காணி உறுதிகளுக்கான முத்திரைக் கட்டணம் கிடைத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

1988 இன் 14 கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் (சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1978 இன் 01 கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நகர சபையின் உப தலைவர் உட்பட 07 மந்திரிமாரினால் 2012, 2013 மற்றும் 2014 ஆண்டு தொடர்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

தென் மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் இலக்கம் 1413/5 மற்றும் 2015 அக்டோபர் 05 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியின் விதி 03(1)(1) இன் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக குறிப்பிட்ட மாதத்தில் நடைபெற்ற சபை பொது கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்களில் பங்குபற்றி இருக்காத 09 மந்திரிமாருக்கு 2014 ஆண்டின் போது சபை அமர்வு கொடுப்பனவு என ரூபா 60,000 தொகையொன்று செலுத்தி சபை நிதியத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

3.3 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 05 | 04 | 01 | - |
| இரண்டாம் தரம் | 37 | 36 | 01 | - |
| ஆரம்ப தரம் | 86 | 87 | - | 01 |
| அமைய/தற்காலிக/ஒப்பந்த | - | 27 | - | 27 |
| | 128 | 154 | 02 | 28 |

மீளாய்வாண்டிற்கான வருமானச் செலவின் பிரகாரம் பதவியணிச் சம்பளம் மற்றும் மந்திரிமார் படி ஆகிய செலவுகள் ரூபா 40,765,898 ஆக காணப்பட்ட போதும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் ரூபா 36,893,950 மாத்திரமே மீளளிப்பு செய்யப்பட்டுள்ளமையால் சபை நிதியத்திற்கு ரூபா 3,871,948 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

பாதீட்டு வருமானங்கள் செலவுகளிடையே கணிசமான அளவு முரண்கள் காணப்படாமையால் சபையின் பாதீடு நிதி கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்